# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

**சகோ. காலேப் யோசுவா**
**Tele : 04630 - 256157**

**"ஓரேப்"**
**திருவைகுண்டம் - 628 601.**
**தூத்துக்குடி மாவட்டம்.**

# ஆரவாரம் 1 தெச.4:16

1. பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு, அதன் பக்தி விருத்திக்காக கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான் எழுதுகிறதாவது: தேவனுக்குப் பிரியமான சகோதரரே, நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். 1 தெச.4:16. கர்த்தர் தம்முடைய மணவாட்டி சபையை எடுத்துக்கொள்ள வானத்திலிருந்து இறங்கும் போது முதலாவது **ஆரவாரம்** புறப்பட்டுச் சென்றது. **ஆரவாரம்** என்பது செய்தி. அந்தச் செய்தி ஜீவஅப்பமாக புறப்பட்டு சென்று மணவாட்டியை பிறப்பிக்கிறது, அவளை ஒன்று கூட்டுகிறது.

3. இந்தச் செய்தியின் நேரம் புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் இருவரும் எழுந்து தங்கள் தீவெட்டிகளை ஆயத்தப்படுத்தும் நேரம். மத்.25:7. புத்தியுள்ள கன்னிகைகள் தீவெட்டியில் எண்ணை இருந்தது. புத்தியில்லாத கன்னிகைகள் தீவெட்டியில் எண்ணை இல்லை. ஆனால் இது இருவரும் தங்களை ஆயத்தப்படுத்தும் நேரம். ஆக **ஆரவாரம்,** புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் இருவரும் மணவாளனுக்கு எதிர்கொண்டு போக, எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு தங்களை ஆயத்தப்படுத்தும் செய்தியாகும். இந்த ஆரவார செய்தியில் புத்தியுள்ள, புத்தியில்லாத கன்னிகைகள் இருவரும் உண்டு. மணவாளன் வருகையில் புத்தியுள்ளவர்கள் அவரோடே கூட கல்யாண வீட்டுக்குள் பிரவேசிப்பார்கள். புத்தியில்லாதவர்கள் கைவிடப்பட்டு, உபத்திரவக்காலத்தில் சுத்திகரிக்கப்பட்டு, வெள்ளைசிங்காசன நியாயத்தீர்ப்பில் நின்று, நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

4. 1933ம் ஆண்டு, ஜுன் மாதம், 15ம் தேதி மதியம், ஏழாம் சபைக்காலத் தூதன் (சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம்) அமெரிக்காவில், ஓகியோ நதிக்கரையில் சுமார் 500 பேருக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்க நின்றுகொண்டிருந்தார். சுமார் 2 மணிக்கு 17வது நபருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் சமயம் **மேலே பார்** என்ற ஒரு சத்தத்தைக் கேட்டார். அவர் மேலே பார்த்தபோது தேவன் அக்கினிஸ்தம்பத்தில் காட்சியளித்தார். **தேவன் இறங்கினார்**.யோவான் ஸ்நானகன் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டது போல **உன் செய்தி** கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும் என்று விளம்பிற்று. இந்தச் செய்தி பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களுடைய இருதயத்துக்கு திருப்புவதற்காகக் கொடுக்கப்படுகிறது. மல்.4:6. இந்தச் செய்திதான் கர்த்தர் வானத்திலிருந்து இறங்கும் போது முதலாவது புறப்பட்டுச் சென்ற **ஆரவாரம்** (1 தெச.4:16) - செய்தி ஆகும்.

5. யோவான் ஸ்நானகன் இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையில் அவரை அறிமுகப்படுத்த அனுப்பப்பட்டான். ஆனால் ஏழாம் சபைக்காலத் தூதன் அவ்வண்ணமாக அல்ல. தூதனுக்குக் கொடுக்கப்பட்ட செய்தியே மேசியாவின் வருகைக்கு சற்று முன்பு அவரை அறிமுகப்படுத்தும். இன்று தூதன் நம் மத்தியில் இல்லை. அவர் மரித்தோர் உயிர்தெழும் நாளில் உயிரோடெழும்புவார். ஆனால் தூதனுடைய செய்தி இன்னும் நம் மத்தியில் இருந்து நம்மை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு, மணவாளனுக்கு எதிர்கொண்டு போக நம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டு இருக்கிறது. மணவாட்டி உபதேசங்களினால் போஷிக்கப்பட்டு பக்தி விருத்தி அடையவேண்டும்.

6. ஆதலால் தூதனைப் பார்க்காதீர்கள், செய்தினைப் பாருங்கள். "நண்பர்களே என்னை நோக்கி பார்க்க வேண்டாம். நான் உங்கள் சகோதரன். என்பேரில் கவனம் செலுத்த வேண்டாம். நான் இறக்கவேண்டிய ஒரு மனிதன். எல்லோரையும் போல நானும் இறக்கவேண்டியவன். நான் உரைத்தவைகளுக்கு மாத்திரம் செவிகொடுங்கள். நான் உரைத்தது செய்தியாகும். தூதன் பேரில் கவனம் செலுத்தாதீர். ஆனால் செய்தியை நன்கு கவனியுங்கள். உங்கள் பார்வை தூதன் பேரில் அல்ல, செய்தியின் பேரில் இருக்கவேண்டும். நான் அதன் பேரில் மாத்திரமே கவனம் செலுத்தவேண்டும். (**ஐயன்மீர், இதுவா சமயம்,** பக்கம் 84, கடைசி பத்தி)

7. Many times I do things that is wrong (Q & A 20) I'm just human and can subject to mistakes. (**Bride tree** Page 3, Para 27) I know I have failed in many things and continued to fail. (**Easter seal**, Page 44, Para 2) நான் அநேக வேளைகளில் தவறானதைச் செய்கிறேன். நான் ஒரு மனிதன், ஆதலால் தவறுக்குரியவன். அதோடுமட்டுமல்ல நான் அநேக காரியங்களில் தோல்வியடைந்துள்ளேன், இன்னும் தோல்வியடைபவனாகவும் இருக்கிறேன் எனத் தீர்க்கத்தரிசி தம்முடைய தனிப்பட்ட காரியங்களை கூறுவதால் தீர்க்கத்தரிசியின் தனிப்பட்ட வாழ்க்கையை பார்க்காமல், அவர் மூலமாக தேவன் கொடுத்த செய்தியை மட்டும் நாம் பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

8. இதோ வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார். வெளி.4:2. உள்ளும் புறமும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த ஒரு புத்தகம் அவருடைய வலதுக் கரத்தில் இருந்தது. வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது ஒருவனும் அந்த புத்தகத்தைப் பார்க்கவும், திறக்கவும், அதன் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவானாகக் காணப்படவில்லை. வெளி.5:1-4. ஆனால் ஆட்டுக்குட்டியானவர் வந்து சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்தவருடைய வலதுக் கரத்திலிருந்து புஸ்தகத்தை வாங்கினார். முத்திரைகளை உடைத்தார். வெளி. 5:7,6:1. ஒவ்வொரு முத்திரையும் அதனதன் செய்தியைக் கொண்டுவந்தது. அதுதான் அந்த ஆரவாரம் - செய்தி. இது தான் கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியான செய்தி. தேவனால் அருளப்பட்ட இந்தச் செய்தி பிள்ளைகளுடைய இருதயத்தை பெந்தெகொஸ்தே பிதாக்களிடத்திற்குத் திருப்பும்.

9. பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்தான். அது கிறிஸ்து. திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையில் இருந்தது. இது உள்ளும் புறமும் எழுதப்பட்டு ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டு, ஆட்டுக்குட்டியானவரால் திறக்கப்பட்ட புத்தகம். பலமுள்ள வேறொரு தூதன் சிங்கம் கெர்ச்சிக்கிறது போல மகா சத்தமாய் ஆர்ப்பரித்தான். அவன் ஆர்ப்பரித்த போது ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின. அந்த ஏழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கின போது, யோவான் எழுதவேண்டுமென்றிருந்தான். அப்பொழுது ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை எழுதாமல் முத்திரைப் போடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. வெளி.10:1-4.

10. இந்த ஏழு இடிமுழக்கங்களின் சத்தம் யாருடையது? மகிமையின் தேவன் முழங்குகிறார்.சங்.29:3. தேவனுடைய சத்தம் இடிமுழக்கம் போன்றது (எ.மு.பக்கம் 143) பலத்த இடிமுழக்கம் தேவனுடைய சத்தம் (எ.மு.பக்கம் 142) இதற்கு ஆதாரமாக தேவனுடைய சத்தம் இடிமுழக்கம் போன்றது என்பதை யோ.12:28-30 வசனங்களில் தியானிக்கலாம்.

11. ஏழாம் சபைக்காலத் தூதன் சூரிய அஸ்தமன சிகரத்தில் சந்தித்த ஏழு தூதர்களின் கூட்டத்திற்கும், இந்த ஏழு இடிமுழக்கங்களுக்கும் உள்ள சம்பந்தம் என்ன? இந்த ஏழு தூதர்களும், அந்த ஏழு இடி முழக்கங்களை தங்கள் கரங்களில் பிடித்திருந்தார்கள்(ஏ.மு.பக்கம் 19) இந்த ஏழு தூதர்கள், அந்த ஏழு இடிமுழக்கங்கள் சொன்னதை ஏழாம் சபைக்காலத் தூதனுக்கு வெளிப்படுத்திக்கொடுத்தார்கள். (ஏ.மு.பக்கம் 19) ஆக ஏழு இடிமுழக்கங்களின் இரகசியங்களை அந்த ஏழு தூதர்கள் கொண்டிருந்தார்கள். அவர்கள் அதை ஏழாம் சபைக்காலத் தூதனுக்கு வெளிப்படுத்திக்கொடுத்தார்கள். ஆக இந்த ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட இரகசியங்கள் யாவும் அந்த ஏழு இடிமுழக்கங்களின் நேரத்தில் வெளிப்பட்டது. அல்லது வெளிப்படுத்தப்பட்ட இரகசியங்களை அந்த ஏழு தூதர்கள் கொண்டிருந்தார்கள். அவர்கள் அதை ஏழாம் சபைக்காலத் தூதனுக்கு வெளிப்படுத்திக்கொடுத்தார்கள்.(ஏ.மு.பக்கம் 70) ஒவ்வொரு முத்திரையும் ஒவ்வொரு இடிமுழக்கத்துடன் திறக்கப்பட்டது. ஒவ்வொரு இடிமுழக்கமும் தன்தன் செய்தியைக் கொண்டு வந்தது. 18.3.1963 முதல் 24.3.1963 வரை ஏழு நாட்கள், ஏழு முத்திரைகளின் இரகசியத்தை, ஏழு தூதர்களிடமிருந்து, ஏழாம் சபைக்காலத் தூதன் பெற்று, ஏழாவது சபைக்கு வெளிப்படுத்தினார். ஒவ்வொரு முத்திரையும் அதனதன் செய்தியைக் கொண்டு வந்தது. அது தான் **ஆரவாரம்** - செய்தி. (1 தெச.4:16) ஏழாம் மணி நேரத்தில், ஏழாம் தூதன் நாட்களில் தேவனுடைய பரம இரகசியம் அனைத்தும் நிறைவேறிற்று.

12. **ஏழு முத்திரைகளின் இரகசியம் தான் அந்த ஆரவாரம். இந்த ஆரவாரம் தான் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியான செய்தி. அது தான் கர்த்தர் வானத்திலிருந்து இறங்கி வரும் போது முதலாவது புறப்பட்டு சென்ற ஆரவாரம் - செய்தி.**

13. ஏழு முத்திரைகளின் இரகசியத்தை வெளிப்படுத்துவது மனுஷகுமாரனுடைய ஊழியம். ஆதலால் தான் ஏழு தூதர்களின் கூட்டம் மனுஷகுமாரனை வெளி.1:13,14க்கு ஒப்பாக அவருடைய சிரசும், மயிரும் வெண்பஞ்சைப் போலவும், உறைந்த மழையைப் போலவும் வெண்மையாகக் காணும்படி சபைக்காலத்துக்கு வெளிப்படுத்தியது. இப்பொழுது சரியாக சூரியஅஸ்தமன மலையின் மேல் சூரிய அஸ்தமன வெளிச்சம், சாயங்கால வெளிச்சம் வந்துவிட்டது. தேவன் தம்மை உறுதிப்படுத்துகிறார். அது என்ன? தேவனும் கிறிஸ்துவும் ஒருவரே என்னும் உண்மையாகும். அந்த **வெள்ளை** எதனைப் போல, நாம் வெளிப்படுத்தல் முதலாம் அதிகாரத்தில் பேசினவிதமாக அவருடைய தலையின் மேல் இந்த தலை அங்கியைக் கண்டீர்கள். பாருங்கள் சகல அதிகாரத்தையுடையவராய் பிரதான தேவன் ! வேறே சத்தமில்லை. வேறே தேவனில்லை, வேறு ஒன்றும் இல்லை. தேவத்துவம் சரீரபிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. தூதர்களே அவருடைய தலை அங்கி. ஆமென்.(**மலை மேல் உள்ள கவர்ச்சி என்ன?** பத்தி 147) அந்தப் படத்தை வலது பக்கம் திருப்பின போது, ஏழு சபைக்காலங்களில் இயேசு காணப்பட்ட விதமாக அது இருந்தது. தலையின் வெள்ளைத் தலை அங்கியை (wig) அணிந்து, சகல அதிகாரமும் கொண்ட தேவனாக, அவர் அல்பாவும் ஒமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். அவரே எல்லா நித்தியத்துக்கும் பிரதான நித்தியமாயிருந்து, அங்கு நின்று கொண்டு, அந்த மணிநேரத்திற்கான, செய்தியை உறுதிப்படுத்தினார். (**மலை மேல் உள்ள கவர்ச்சி என்ன?** பத்தி 142) **அது மனுஷ குமாரனுடைய அடையாளம் வானத்தில் (Doing God a service without His will. Page 32, Para 167 / 18.7.1965)**

14. இந்நாட்களில் சென்னை - நடுவீரப்பட்டு கிராமத்திலிருந்து எஸ்.ரவீந்திரராஜ் என்பவரால் ஆரவாரம் (1தெச.4:16) என்ற தலைப்பில் செய்தி புறப்பட்டுச் சென்று கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். இதன் இதழ்கள் 12 மற்றும் 15 என் கரங்களில் கிடைத்தது. இந்த தியானத் தாளில் பல இடங்களில் ஆரவாரம் 1 தெச.4:16ன் செய்தித் தொகுப்புகள் இடம் பெற்றிருப்பதை கண்டு மகிழ்ந்தேன். ஆனாலும் சில இடங்களில் மாறுபாடுகள் காணப்பட்டது. இவர் தனது இதழ் 15, மே 2001ல் 14வது பக்கத்தில் **இயேசு மட்டும்** (Jesus Only) என்ற தலைப்பில் ஒரு செய்தி எழுதுகிறார். இதில் **ஆரவாரம்** 1தெச.4:16-

செய்தியில் இருப்பவர்கள் **இயேசு மட்டும்** (Jesus Only) கூட்டத்தார் எனக் கூறுகிறார். இந்த போதனை 1 தெச.4:16 **ஆரவாரம்** - செய்திக்கு நூற்றுக்கு நூறு சதவீதம் முரணானது.

15. **இயேசு மட்டும்** கூட்டத்தார் குறித்து இக்காலத்துக்குரிய செய்தி என்ன கூறுகிறது? ஒருத்துவ கொள்கைக்காரர்கள் **இயேசுவின் நாமம்** வியாக்கியானத்தில் பாதை தவறினார்கள். திருத்துவக்காரர்கள் நிசாயா ஆலோசனை சங்கத்தில் நிகழ்ந்தவாறு பிதா குமாரன் பரிசுத்தஆவி தத்துவத்தைக் கடைபிடித்து பாதை தவறினார்கள். இவர்கள் இருவருமே தவறு. (**ஐயன்மீர், இதுவா சமயம்**. பக்கம் 58, தொடக்க பத்தி)

16. **நான் ஒருத்துவக்காரன் அல்ல**. ஒருத்துவக்காரர் கூறுகிற விதமான **இயேசு**வில் நான் விசுவாசம் கொள்ளவில்லை. ஏனெனில் இயேசு என்னப்பட்டவர்கள் அநேகர் இருந்தார்கள். நானோ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டுள்ளேன். அதுதான் சரி. அவர்கள் விசுவாசிக்கிற வண்ணமாக நான் விசுவாசிக்கிறதில்லை. அதிலிருந்து மாறுபட்டது எனது விசுவாசம். அவர்கள் மறுபிறப்படைவதற்காக **இயேசுவின் நாமத்தில்** ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். ஞானஸ்நானம் பெறுவதால் அது மறுபிறப்பை உங்களுக்குள் கொண்டுவந்து, உங்கள் தண்ணீர் ஞானஸ்நானத்தினால் கிறிஸ்துவை உள்ளே கொண்டு வருகிறது என்று அவர்கள் நம்புகிறார்கள். நான் அவ்வாறு விசுவாசிக்கவில்லை. மறுபிறப்பானது, பரிசுத்த ஆவியினாலே, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைக்கொண்டு கிடைக்கிறது. அதுதான் சரி. தண்ணீர் ஞானஸ்நானமானது ஏற்கனவே உள்ளே நடைபெற்றுள்ள மறுபிறப்புக்கான கிரியைப்பற்றி புறம்பே நிகழ்த்தப்படுகிற ஒரு செயல் தான். (**இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல்** , பக்கம் 338, பத்தி 107)

17. **ஒருத்துவம்** கொள்கைக்காரர்களே நீங்கள் சிலர் தவறான ஞானஸ்நானம் கொடுக்கிறீர்கள். நீங்கள் இரட்சிப்பைப் பெறுவதற்கு ஞானஸ்நானம் தான் உதவுகிறது என்று சொல்லி ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறீர்கள். தண்ணீர் ஞானஸ்நானம் ஒரு மனிதனை இரட்சிப்பதில்லை. இரத்தம் தான் அதை செய்கிறது. மனம் திரும்பும் பொழுது, ஞானஸ்நானத்தினால் மறுபிறப்பின் அனுபவம் வருகிறதில்லை. இல்லை ஐயா! மறுபிறப்பின் அனுபவம் ஆவியினால் வருகிறது. உள்ளத்தில் நடைபெற்றுள்ள மறுஜென்மம் அடைந்த கிரியையின் வெளிப்பிரகாரமான தோற்றம் தான் ஞானஸ்நானம். (**இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல்**, பக்கம் 67, பத்தி 274)

18. **இயேசு மட்டும்** உபதேசம் தவறானது என்பதை இன்னும் நீங்கள் **கேள்வி பதில்கள்** 42, பத்தி 307: 56, பத்தி 145: 92, பத்தி 197: 241, பத்திகள் 67,68: 292, பத்தி 137. மேலும் செய்தி **Palmer worm, locust, caterpillar** ல் பக்கம் 32, பத்தி 211 ல் வாசிக்கலாம்.

19. ஆக, தீர்க்கத்தரிசி தன்னை என்றுமே **இயேசு மட்டும்** கூட்டத்தாருடன் அடையாளம் காட்டிக்கொள்ளவில்லை. **இயேசு மட்டும்** உபதேசம் தவறு என்றே போதித்து வந்தார். செய்தி இவ்வாறிருக்க தீர்க்கத்தரிசியின் செய்தியில் உள்ளவர்கள் **இயேசு மட்டும்** கூட்டத்தார் என சகோ.ரவீந்திர ராஜ் அழைப்பது அவரது மதியீனத்தைத் தான் காட்டுகிறது. **இயேசு மட்டும்** கூட்டத்தாருக்கும், இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ளவர்களுக்கும் உடன்பாடு கிடையாது.

20. சென்னை, நடுவீரப்பட்டிலிருந்து புறப்படும் **ஆரவாரம்** கூறுவது போன்று பேதுரு, **இயேசு மட்டும்** கூட்டத்தான் இல்லை. இது குறித்து தீர்க்கத்தரிசி தனது செய்தி **வாசலின் திறவுகோல்** என்பதில் 115வது பத்தியில் இவ்வாறு கூறுகிறார். எனவேதான் **இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம்** என்னும் வாக்கை மாத்திரம் நான் ஞானஸ்நானத்தில் கூறுகிறேனேயன்றி, மறுஜென்மத்திற்காக (Regeneration) நான் ஞானஸ்நானம் கொடுப்பதில்லை. ஐக்கிய பெந்தெகொஸ்தே சபை இவ்விதம் மறுஜென்மத்திற்காக இயேசு கிறிஸ்துவில் ஞானஸ்நானம் கொடுக்கிறது. ஆனால் எனக்கு அதில் நம்பிக்கை இல்லை. அவர்கள் வேண்டுமானால் அப்படிச் செய்யலாம். பேதுரு முதலாவதாக **மனந்திரும்பி** என்று சொன்னான் என்பதை நான் விசுவாசிக்கிறேன். தண்ணீர் உங்கள் பாவங்களை போக்க முடியாது... ஆனால் நானோ மனந்திரும்புதல், பயபக்தியுள்ள விசனம் (Godly sorrow) என்பதில் நம்பிக்கைக்கொண்டுள்ளேன். இந்தப் பகுதியை நீங்கள் நன்கு தியானிப்பீர்களானால் பேதுரு **இயேசு மட்டும்** ஒருத்துவக்கூட்டத்தை சார்ந்தவன் அல்ல என்பதைத் தீர்க்கத்தரிசி விளக்கிக்காட்டுவதை அறிந்துகொள்ளலாம்.

21. ஆக பேதுரு, பவுல், ஸ்தேவான் போன்றவர்கள் **இயேசு மட்டும்** கூட்டத்தாரைச் சார்ந்தவர்கள் எனக்கூறும் சகோ.ரவீந்திரராஜ்யின் ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல் ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்துமாயிருக்கிறது. சென்னை - நடுவீரப்பட்டிலிருந்து புறப்படும் **ஆரவாரம்** மக்களை இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து திசை திருப்ப முயற்சிக்கிறது. இந்த ஆரவாரத்தினால் வஞ்சிக்கப்படாதீர்கள். இதனுடைய போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல.

22. இவ்வாறாக சகோ.ரவீந்திரராஜ்யின் **ஆரவாரம்** இக்காலத்துக்குரிய செய்தியியல் உள்ளவர்களை **இயேசு மட்டும்** கூட்டத்தார் ஆக்கினதோடு மட்டுமின்றி, அவர்களை ஒழுங்கோ, கட்டுப்பாடோ இல்லாதவர்களாக்கிவிட்டது. இவர் தன்னை இக்காலத்துக்குரிய செய்தியில் இருப்பவன் என்று அழைத்துக்கொண்டு, அதே நேரத்தில் தன் சுயரூபத்தை வெளிப்படுத்தி, அவர் உண்மையாகவே எந்தவிதமான ஒழுங்கும், கட்டுப்பாடும் இல்லாதவர் என்பதை உறுதிப்படுத்தி வருகிறார். இவருக்கும் இக்காலத்துக்குரிய செய்திக்கும் என்ன சம்பந்தம் ? இவருக்கு **ஆரவாரம்** - செய்தியில் பங்கு ஒன்றுமில்லை.

23. உதாரணமாக, இவர் தன்னை, இவரது ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் பாஸ்டராக அழைத்துக்கொண்டார். பல ஆண்டுகளுக்கு பின் ஒரு ஜெர்மன் நாட்டு சகோதரனால் தன்னை பாஸ்டராக பிரதிஷ்டை பண்ணிக்கொண்டார். அவர் இவரது சபைக்கட்டிட கட்டுமானத்துக்காக கொடுத்த பண

உதவிக்காக அவரை கௌரவிக்க இந்த நாடகம் ஆடினார். பின் மற்றொரு வெளிநாட்டு சகோதரனால் பண உதவிகள் கிடைத்தது. ஆதலால் தனது சபையில் உள்ள சகோ.ஜேம்ஸ் என்பவரை பாஸ்டர் ஆக்கி, தான் அந்த பொறுப்பிலிருந்து விலகி, வெளிநாட்டிலிருந்து பெற்ற பண உதவியினால் டேப் (ஒலி நாடா) ஊழியம் செய்தார். அந்த ஊழியம் இறங்கு வரிசையில் இறங்கி வந்தவுடன், தான் பாஸ்டராக நியமித்து பணிபுரிந்து கொண்டிருந்த சகோ. ஜேம்ஸை பதவியிலிருந்து இறக்கி தன்னை மீண்டும் பாஸ்டராக்கிக் கொண்டார். பாஸ்டர் பதவி இவர் கரங்களில் எப்படி சீரழிகிறது பார்த்தீர்களா ! இது தான் இவரது ஒழுங்கு. இக்காலத்துக்குரிய செய்தியில் இருப்பவர்கள் ஒழுங்கோ, கட்டுப்பாடோ இல்லாதவர்கள் என எழுத இவருக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

24. கர்த்தர் தமது சரீரமாகிய சபை பக்தி விருத்தியடைய கர்த்தரால் ஏற்படுத்தப்பட் ஐந்து வகை ஊழியத்தில் ஒருவருக்கு ஒரு ஊழியம் என்பதே இக்காலத்துக்குரிய செய்தி. தீர்க்கத்தரிசி ஒரு சுவிசேஷகன் அல்ல. சுவிசேஷகனும் ஒரு தீர்க்கத்தரிசி அல்ல. மேய்ப்பன் ஒரு சுவிசேஷகன் அல்ல. சுவிசேஷகனும் ஒரு மேய்ப்பன் அல்ல. தேவன் சபையில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி உத்தியோகத்தைக் கொடுத்திருக்கிறார். அவர் என்னை தீர்க்கத்தரிசியாக இருக்க அழைத்திருப்பாரேயானால், நான் சுவிசேஷகனாக இருக்கமுடியாது. நான் சுவிசேஷகனாக இருக்க அவர் என்னை அழைத்திருப்பாரேயானால், நான் தீர்க்கத்தரிசியாக இருக்க முடியாது. அவர் என்னை சுவிசேஷகனாக இருக்க அழைக்கவில்லை. ஆனால் "நீ சுவிசேஷகனுடைய வேலையைச் செய்" என்றார். அவர் என்னை சுவிசேஷ களத்திலிருந்து அழைத்து, தம்முடைய தீர்க்கத்தரிசியாக்கிக்கொண்டார். அப்படி இருக்குமானால், நான் சுவிசேஷப் பணியை விட்டுவிடுவேன். அவர் என்னை தீர்க்கத்தரிசியாக அழைத்திருப்பாரேயானால் நான் சுவிசேஷகனாக இருக்க முடியாது. நான் சுவிசேஷகனாக இருந்தால், தீர்க்கத்தரிசியாக இருக்க முடியாது. நான் இந்த இரு உத்தியோகங்களையும் ஒன்றோடொன்று கலந்து விடுகிறேன். இவ்வாறாக தீர்க்கத்தரிசி ஒருவர் ஐந்து வகை ஊழியத்தில் இரு ஊழியங்களை வகிப்பது தேவசித்தத்துக்குப் புறம்பானது என மிகத்தெளிவாக செய்தி **இயேசுவின் பட்சம் சேர்ந்திருந்தல்**, பத்தி 64 - 70 வரை குறிப்பிடுகிறார்.

25. 1 தெச.**ஆரவாரம்** - செய்தி இப்படியிருக்க இவர் தான் மேய்ப்பராக இருக்கும் சபையை விட்டு விட்டு அடிக்கடி ஊர் சுற்றுகிறதென்ன? ஐந்து வகை ஊழியத்தில் தன் ஸ்தானத்தை அறியாத ஒருவன் எவ்வாறு அதில் ஊழியக்காரனாக இருக்க முடியும்? இவரைப் போன்று பல ஊழியங்களில் தங்கள் கைகளை வைக்கும் அதிகப்பிரசங்கிகள் நம் மத்தியில் அநேகர் உண்டு. இவர்களுடைய ஊழியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், வஞ்சிக்கப்படாதீர்கள் என திரும்பத்திரும்ப நான் உங்களை எச்சரித்துக்கொண்டே இருக்கிறேன்.

26. மேலும் ஒரு வெளிநாட்டுக்கார ஊழியர் வந்தவுடன், அவருக்கு வால்பிடித்துக் கொண்டு காடுமேடு சுற்றுகிற பாஸ்டர்களைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். இது கிராமஊழியம், இது விக்கிரகாராதனைக்காரர்கள் மத்தியில் ஊழியம் எனக்கூறி, ஒரு பாய் விரித்து, மேளம் கொட்டி, பாட்டுப் பாடி, பில்லிசூனியத்திலிருந்து விடுதலை, வியாதியிலிருந்து விடுதலை, பிரச்சனையில் இருந்து விடுதலை, மனவியாகுலத்திலிருந்து விடுதலை எனக் கூறி இடதுகைக்கும், வலதுகைக்கும் வித்தியாசம் தெரியாதவர்களை நயவசனிப்பினால் வசீகரித்து அவர்களை இம்மைக்கான நன்மைகளுக்காக மாத்திரமே கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையாயிருக்க வழிநடத்தி தனக்கு ஒரு தலைமை இருப்பிடம் மேலும் பல இடங்களில் கிளை அலுவலகங்களை ஏற்படுத்திக்கொண்டு ஊழியம் செய்து வரும் பாஸ்டரும் கள்ள, கபடமுள்ள வேலையாளே. இப்படிப்பட்டவர்களுக்கும் 1 தெச.4:16 **ஆரவாரம்** - செய்திக்கும் தொடர்பு இல்லை. ஆனாலும் இக்காலத்துக்குரிய செய்தியில் இப்படிப்பட்ட மேய்ப்பர்கள் அதிகமதிகம், இவர்களைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். இவர்கள் தங்களது வயிற்றிற்கே ஊழியம் செய்துவருகிறார்கள்.

27. அடுத்து இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ள விசுவாசிகள், எக்காரணத்தைக் கொண்டும் இக்காலத்துக்குரிய செய்தியில் இல்லாத ஒரு அவிசுவாசியை திருமணம் செய்யக் கூடாது. ஒரு விசுவாசி அந்நியநுகத்திலே அவிசுவாசியுடன் பிணைக்கப்படாதிருக்க வேண்டும். விசுவாசிக்கு அவிசுவாசியுடன் பங்கு இருக்கக் கூடாது. அப்படியிருந்தால் அது அசுத்தம். விசுவாசிகள் அவிசுவாசிகள் நடுவிலிருந்து புறப்பட்டு, பிரிந்து வாழ வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு கர்த்தர் பிதாவாயிருப்பார். இவர்கள் அவருக்கு குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பார்கள். 2 கொரி.6:16-18. நாய் தான், தான் கக்கினதைத் திரும்பத் தின்னும். இப்படியிருக்க சென்னை - நடுவீரப்பட்டிலிருந்து புறப்படும் ஆரவாரத்தின் உரிமையாளர் தான் விட்டு, வெளிவந்த சபை ஸ்தாபனங்களை மீண்டும் நாடி, அங்கு தன் மக்களுக்கு சம்பந்தம் கொண்டார். பாருங்கள் இவரிடம் என்ன யோக்கியதை, ஒழுங்கு இருக்கிறது? சபைக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டிய இவர் பின்மாதிரியாக இருப்பதால், சபை எப்படி பக்திவிருத்தி அடையும்? ஆனாலும் இவரை அடையாளம் கண்ட பிறகும் ஒரு கூட்டத்தார் இவரைச் சார்ந்து இருக்கிறார்கள் என்றால் இவருக்குள்ளே இருக்கிற அதே வஞ்சிக்கும்ஆவி தான் அவர்களுக்குள்ளும் இருக்கிறதாகும். ஆதலால் இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ள களைகள் மற்றும், புத்தியில்லாத கன்னிகைகள் மத்தியில் இவருக்கு நல்ல வரவேற்பு உண்டு.

28. மேலும் ஸ்தீரியின் தலைமுக்காடு குறித்து இக்காலத்துக்குரிய செய்தி என்ன கூறுகிறது? தீர்க்கத்தரிசி தமது **கேள்வி பதில்** 18ல் கூறுகிறதாவது: இங்கு ஒரு ஸ்தீரி சகோ.பிரன்காமிடம் அவளுடைய புருஷன் அவளை நீண்ட தலைமயிர் வைத்திருக்கக் கூறுகிறார் என்கிறாள். அதற்கு தீர்க்கத்தரிசி, தேவனும் அப்படியே விரும்புகிறார் எனக் கூறி, ஒரு ஸ்தீரி நீண்ட தலைமயிர் வைத்திருக்க வேண்டும். அதுவே அவளுடைய தலைமுக்காடு என்கிறார். அதோடு மட்டுமல்ல, இன்றைய பெண்கள் தொப்பியை (நம் நாட்டு பெண்கள் சேலை முந்தானையை தலைமுக்காடாக உபயோகிக்கிறார்கள்) தங்கள் தலைமுக்காடு என்கிறார்கள். அது தவறு என தீர்க்கத்தரிசி கடிந்துகொள்ளுகிறார். மேலும் நீங்கள் என்ன நினைத்தாலும் சரி, ஒரு ஸ்தீரிக்கு தலைமுக்காடு அவளது நீண்டதலைமயிரே எனக் கூறி அதை **கர்த்தர் உரைக்கிறதாவது** என்கிறார். செய்தி ஸ்தீரியின் தலைமுக்காடு குறித்து இவ்வளவு

தெளிவாகக் கூற, சென்னை - நடுவீரப்பட்டிலிருந்து புறப்படும் ஆரவாரம், ஒரு ஸ்தீரி தன் தலையை சேலை முந்தானையினால் மூடவேண்டும், அதுவே அவளது தலைமுக்காடு என உபதேசிப்பது எப்படி 1தெச.4:16 **ஆரவாரம்** - செய்தியாக இருக்க முடியும்? அப்படியானால் இவருக்கும் இக்காலத்துக்குரிய செய்திக்கும் என்ன சம்பந்தம்? இவர் நிச்சயமாக ஒரு கட்டுப்பாடும், ஒழுங்கும் இல்லாத தன் மனம் போன போக்கில் செயல்படும் கூட்டத்தை சார்ந்தவரே. இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறேன் எனக் கூறிக்கூறியே செய்திக்குள் களைகளை விதைத்து வருகிறார். இவருக்கு ஒரு குருவும் சென்னையில் இருக்கிறார். குருவும், சீடனும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.

29. இப்பொழுது, நடுவீரப்பட்டு ஆரவாரத்தின் மொழிபெயர்ப்பைக் கூட சற்று சிந்தியுங்கள். தீர்க்கத்தரிசி தம்முடைய செய்தி **Identification** 73 வது பத்தியில் God in you, see, the same God, in three different manifestations, but the same God all the time எனக் கூறுகிறார். இதை இவர் தனது இதழ் 12 ல் பிப்ரவரி 2001, 7வது பக்கத்தில் "ஒரே தேவன், மூன்று வித்தியாசமான அவதாரங்களில்" என மொழிபெயர்க்கிறார். அவதாரம் என்றால் Incarnation. இந்த வார்த்தை பரிசுத்த வேதாகமத்தில் எங்குமே கிடையாது. மேலும் வேதாகமத்தில் God manifest, reveal போன்ற வார்த்தைகளே உபயோகிக்கப்பட்டுள்ளது. அவைகள் வெளிப்படுத்துதல் Expose, disclose என்ற பொருளிலேயே உள்ளது. பாருங்கள் God was manifest in the flesh – தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் என்றே உள்ளது. தேவன் மனுஷ அவதாரத்தில் தோன்றினார் என்ற எங்குமே கிடையாது. அவதாரம் வேறு (Incarnation) , வெளிப்படுத்தல் வேறு (Manifest) தேவத்துவத்தில் பிதா ஒரு அவதாரம் இல்லை, குமாரன் ஒரு அவதாரம் இல்லை, பரிசுத்தஆவி ஒரு அவதாரம் இல்லை. அவதாரம் என்பது தன்னுடைய சுயரூபத்தை மறைத்துக்கொண்டு இன்னொரு ரூபத்தில் வருவது ஆகும். அதாவது தேவன் தன்னுடைய தெய்வீகத் தன்மையை மறைத்துக்கொண்டு இன்னொரு உருவத்தில் வருவது ஆகும். தேவத்துவத்தில் உள்ள பிதா குமாரன் பரிசுத்தஆவி தேவனுடைய தன்மைகளேயன்றி (Attributes) அவதாரம் (Incarnation) இல்லை என்பதே 1 தெச.4:16 **ஆரவாரம்** - செய்தி. ஆக, இவரது மொழிபெயர்ப்புகளும் சீர்கேடானதாகவே உள்ளது. மக்களை வஞ்சிக்கிறதாகவே இருக்கிறது. சத்தியத்துக்கு முரணாகவே இருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன், ஒரு முறை நான் இவரை அணுகி தீர்க்கத்தரிசியின் செய்திகளை தமிழில் மொழிபெயர்க்க அழைத்தேன். அப்பொழுது ஐய்யயோ ! வெளிநாட்டினரின் சவகாசம் வேண்டவே வேண்டாம் என்று ஆடிய நாடகம் இன்றும் என் கண்முன் நிற்கிறது. தன் தாழ்மையான நடிப்பினால் மக்களை மோசம் போக்குகிறார்.

30. ஆக, இக்காலத்துக்குரிய செய்தியில் உண்மையும் உத்தமமான விசுவாசிகள் மத்தியில் நிச்சயமாக ஒழுக்கம், கட்டுப்பாடு காணப்படும். இவர்களை அழைத்தவர் பரிசுத்தராயிருப்பதால் இவர்களும் பரிசுத்தமாய் இருந்து, தங்கள் வார்த்தையில், நடக்கையில், அன்பில், ஆவியில், விசுவாசத்தில், கற்பில் பிறருக்கு மாதிரியாக இருந்து, எது வரையில் தேறிஇருக்கிறோமோ, அது முதல் ஒரே ஒழுங்காய் நடந்து, ஏக சிந்தையாயிருந்து, சகலத்தையும் நல்லொழுக்கமாகவும், கிரமமாகவும் செய்து எழுதப்பட்ட நிருபங்களாயிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல எப்பொழுதும் தேவனுக்கு பிரியமானதையே செய்து, வார்த்தையில் நிலைத்திருந்து, இவர்களது ஒழுக்கம் உலகத்துடன் கலவாது காத்துக்கொண்டு வருகிறார்கள். ஏனென்றால் சிதறுண்டு, பரவியிருக்கும் இவர்களது வழக்கங்கள் சகல ஜனங்களுடைய வழக்கங்களுக்கும் விகற்பமாயிருக்கிறது. இவர்கள் ஜாதிகளோடே கலவாமல் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் தனியே வாசமாயிருக்கிற ஜனங்கள்.

31. ஆனால் நடுவீரப்பட்டு ஆரவாரம் போன்று இவர்கள் மத்தியில் களைகளும், புத்தியில்லாத கன்னிகைகளும் காணப்படுவதாலும், அவர்களும் இக்காலத்துக்குரிய செய்தியை சார்ந்து அதனுடன் தங்களை அடையாளம் காட்டிக்கொண்டு செய்தியின் சாரத்தில் வளர்ந்து, புஷ்டியுடன் காணப்பட்டு, ஆனால் அதே நேரத்தில் செய்தியை புறக்கணித்து, தங்களுக்கு சாதகமான பகுதிகளை ஏற்றுக்கொண்டும், இதர பகுதிகளை நிராகரித்தும், செய்திக்கு தவறான வியாக்கியானம் கொடுத்தும் தங்களை தாங்களே வஞ்சித்துக்கொள்வதோடு மட்டுமல்ல பிறரையும் வஞ்சிக்கிறார்கள். இவர்களால் இக்காலத்துக்குரிய செய்தி வஞ்சிக்கப்பட்டு வருகிறது. புத்தியில்லாத கன்னிகைகள், எங்கள் தீவெட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள். மத்.25:8. பரிசுத்தஆவி இவர்களிடம் கிரியை செய்தது உண்மைதான். இது எப்படியெனில் பிதா தீயோர்மேலும், நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும், அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்.மத்.5:45. நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்.யோவே.2:28. இந்த வழியில் தான் புத்தியில்லாதவர்கள் மீது பரிசுத்தஆவி கிரியை செய்தது. ஆனால் அது உண்மையான அபிஷேகம் இல்லை. புத்தியில்லாதவர்கள் நீதிமான்களாக்கப்பட்டவர்கள்தான், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்தான். ஆனால் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெறாதவர்கள். இவர்கள் தங்கள் விசுவாசத்தினால் மட்டும் இரட்சிக்கப்பட்டவர்கள். மாற்.16:16. இவர்களை தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மட்டுமே அடையாளம் கண்டுகொள்ள முடியும். நான் இவர்களை அடையாளம் கண்டுகொண்டேன். நான் கண்டுகொண்டதை நீங்களும் காண வேண்டும் என்பதற்காகவே இந்த செய்தித் தொகுப்பை உங்களுக்கு எழுதுகிறேன். அவர்களுக்குப் பங்காளிகளாகாதீர்கள் என ஆலோசனையும் கூறுகிறேன். தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் முன்னறிந்து, முன்குறிக்கப்பட்டு, அழைக்கப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, ஆவியின் அபிஷேகத்தினால் மகிமைப்படுத்தப்பட்டவர்கள். இவர்கள் தான் கோதுமைக்கும், களைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்ள முடியும். ஏனென்றால் இருவரும் அல்லேலூயா, ஸ்தோத்திரம் கூறுகிறார்கள்.

32. நான் கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றுவதில் கவனமாய் இருக்கும்படி எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள். கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

அக்டோபர், 2002

கிறிஸ்துவின் அன்பில்
***சகோ.காலேப் யோசுவா***